"லேடீஸ் டிசீஸ்" என்று மற்றவர்களுக்குப் பரவும் இந்த 'வெனிரியல் டிசீஸ்'-ஐத் தடுப்பதற்கு முன்ஜாக்கிரதையாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த பால்வினை நோய் ஆண், பெண்ணோடு கொள்ளுகின்ற உறவினாலே ஏற்படாது. சில இடங்களில் யாரோ கொள்ளுகிற தவறான தொடர்பு காரணமாக, ஒருவரிடமிருந்து இன்னொரு வருக்குப் பரவுகிறது. அதுவும் பெண்களாலே தான் பரவுகிறது என்று சொல்ல முடியாது. ஒருகாலத்திலே, சமுதாயத்திலே இருந்த அமைப்பிலே, ஒரு தொழில் முறையிலே, அப்படிப்பட்ட பழக்கத்திற்கு ஆளாகி இருந்தவர் கள் இந்த சாபக்கேட்டுக்குக் காரணமாக இருந்தார்கள். அவர்களிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது. சாதாரண குடும்பப் பெண்களுக்கேகூட கணவன் மூலமாக இந்த நோய் பரவுகிறது. யார் பொறுப்பு என்பதற்கு, இந்த நோய் வந்தவர்கள் தவறுதலாக யாரிடத்திலோ தொடர்பு கொண்டுள்ள னர், அதன் நிமித்தம் தான் வந்தது என்று சொல்வதைத் தவிர, வேறு யாரிடத்திலும் பழியைப் போட்டு தப்பித்துக்கொள்ள முடியாது.

THIRU P. R. THOMAS : Hon. Deputy Chairman, Sir, I would like to know whether it is due to prostitution or immoral traffic in the country, and if so, what steps are proposed to be taken to prevent it.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I do not know the difference between prostitution and immoral traffic. Both are more or less the same and it is according to their own convenience.

Prohibition of Dowry.

*99. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. V. D' MONTE) : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) the steps taken by the Government to enforce strictly the Dowry Prohibition Act, 1961 (Central Act No. 21 of 1961); and

(*b*) whether the Government have conducted any survey to ascertain the evil practices resorted to in the name of Dowry in the State?

1975 நவம்பர் 10]

வரதட்சணை ஒழிப்பு

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1961 ஆம் ஆண்டு வரதட்சணை ஒழிப்புச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 21/1961) கண்டிப்பாகச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டுள்ளதா?

(இ) இம் மாநிலத்தில் வரதட்சணை என்ற பெயரில் நிகழும் தீமைகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் ஏதேனும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வரதட்சணைக் கொடுமைகள் பற்றி வரும் புகார்களை விசாரித்து, தேவையானால் வழக்கு தொடர ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மாநில பிறப்பு, இறப்பு, திருமணத் தலைமைப்பதிவாள ருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி: 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தக் குற்றத் திற்காக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுபற்றிய விவரம் இல்லை.

Service Connections for Pumpsets.

* 100. *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether service connections for pumpsets have not been given to a number of agriculturists in Idur Panchayat of Alathur Union, Tiruchirappalli district, even though they have remitted the prescribed amounts; and

(b) if so, the reasons therefor?